**செய்தி வெளியீடு எண்: 83/2025** **நாள்: 15.10.2025**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் 'மெட்ரோஸ்' கட்டிடத்திற்கு மதிப்புமிக்க IGBC பிளாட்டினம் சான்றிதழ்

நந்தனத்தில் அமைந்துள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகமான, 'மெட்ரோஸ்' கட்டிடம் இந்திய பசுமைக் கட்டிடக் கவுன்சிலின் (IGBC - Indian Green Building Council) பசுமைப் புதிய கட்டிடங்கள் சான்றிதழின் கீழ் உயரிய பிளாட்டினம் மதிப்பீட்டை பெற்றுள்ளது. இந்த பிளாட்டினம் சான்றிதழானது, தளம் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நீர் செயல்திறன், ஆற்றல் சேமிப்பு, வளாகத்திலேயே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு மற்றும் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியத்திற்கான வசதிகள் உள்ளிட்ட பல அளவுகோல்களில் நிலைத்தன்மைக்கான அதன் சிறந்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகக் கட்டிடம் 'மெட்ரோஸ்' தென்னிந்தியாவிலேயே இத்தகைய உயரிய 'பிளாட்டினம்' தர அங்கீகாரத்தைப் பெற்ற முதல் மெட்ரோ தலைமையகம் ஆகும். 52,691 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தக் கட்டிடத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மட்டுமின்றி, CUMTA, TNSDC, TNGCC உள்ளிட்ட பல அரசுத் துறை அலுவலகங்களும் செயல்படுகின்றன.

இந்த திட்டத்தின் கீழ், 69 மரங்கள் பாதுகாக்கப்பட்டன. மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த நில வடிவமைப்பானது மொத்தப் பகுதியில் 79% உள்ளடக்கியுள்ளது. குடிநீரின் பயன்பாடு (potable water consumption) கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் உருவாகும் கழிவுநீரில் (wastewater) கிட்டத்தட்ட 90% சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இந்த கட்டிடத்தில் ஆற்றலைச் சேமிக்கும் செயல்திறன் கொண்ட கண்ணாடிக் முகப்பு (energy saving performance glass façade) பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம், ASHRAE-வின் அடிப்படைத் தரங்களை (ASHRAE baseline standards - ஒரு சர்வதேச ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் தர நிர்ணய அமைப்பு) விட 23.39% கூடுதலாக ஆற்றலைச் சேமிக்கிறது என்பதையும் நிரூபிக்கிறது. வாகனங்களுக்கான மின்னேற்றும் வசதிகளும் (recharging facilities for vehicles) இதில் இடம்பெற்றுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்கள், இந்திய பசுமைக் கட்டிடக் கவுன்சிலின் சென்னை பிரிவின் தலைவர், திரு. மகேஷ் ஆனந்த் அவர்களிடமிருந்து விருதை பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், பத்மஸ்ரீ விருது பெற்ற CRN-ன் மேலாண்மை இயக்குநர் மற்றும் IGBC சென்னை பிரிவின் முன்னாள் தலைவருமான திரு. சி. என். இராகவேந்திரன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு. தி. அர்ச்சுனன், தலைமைப் பொது மேலாளர் திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), கூடுதல் பொது மேலாளர் திருமதி. எஸ். இராஜலட்சுமி, (கட்டிடக்கலை), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், CRN ஆலோசகர்கள் மற்றும் LEAD பசுமைக் கட்டிட ஆலோசகர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**